Datacubed Health

# தனியுரிமைக் கொள்கை

நடைமுறைக்கு வரும் தேதி: 1 ஏப்ரல் 2025

## அறிமுகம்

Datacubed Health-இல் உங்களின் தனியுரிமை எங்களுக்கு முக்கியமானது. நாங்கள் தனிப்பட்ட தகவல்களை எவ்வாறு சேகரிக்கலாம், பயன்படுத்தலாம் மற்றும் பகிர்ந்து கொள்ளலாம் என்பதை இந்தத் தனியுரிமைக் கொள்கை (கொள்கை) விளக்குகிறது. இது எங்கள் வலைத்தளம், சேவைகள், தகவல், கருவிகள், செயல்பாடு, புதுப்பிப்புகள் மற்றும் ஒத்த பொருட்களுக்கும் (கூட்டாகச் சேவைகளுக்கு) பொருந்தும். உங்கள் தகவல் தொடர்பாக உங்களுக்குப் பல்வேறு உரிமைகள் உள்ளன. நாங்கள் என்ன செய்கிறோம், உங்களின் உரிமைகள் என்னென்ன என்பதைப் புரிந்துகொள்ள, கொள்கையைக் கவனமாகப் படிக்கவும்.

## இணைக்கப்பட்ட விதிமுறைகள்

இந்தக் கொள்கையில் முழுமையாகக் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பின்வரும் கூடுதல் விதிமுறைகள் இணைக்கப்பட்டுள்ளன:

- இறுதிப் பயனர் சேவை விதிமுறைகள்
- குழந்தைகளுக்கான தனியுரிமைக் கொள்கை
- குக்கீ கொள்கை

## நாங்கள் யார்

நாங்கள் Data Cubed, LLC d/b/a Datacubed Health. எங்களை legal@datacubed.com என்ற முகவரியிலும், பின்வரும் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்:

Datacubed Health
630 ஃப்ரீடம் பிஸினஸ் சென்டர்
3வது ஃப்ளோர்
King of Prussia, PA 19406

Datacubed Health என்பது அறிவியலை முன்னேற்றுவதற்கும் ஆரோக்கியமான சமூகங்களை உருவாக்குவதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புதுமையான தொழில்நுட்ப நிறுவனமாகும். நாங்கள் தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளைப் பயன்படுத்தி, ஸ்மார்ட்போன் செயலிகள், அணியக்கூடிய சாதனங்கள், வீட்டுச் சாதனங்கள் மற்றும் சுற்றுச்சூழல் சென்சார்கள் மூலம் தரவுகளைச் சேகரிக்கிறோம். இது

தொலைதூர நோயாளி தொடர்பு மற்றும் மெய்நிகர் மருத்துவ ஆய்வுகளைச் சாத்தியமாக்குகிறது. நிறுவனங்கள் மற்றும் சுகாதார நிறுவனங்கள் (“மருத்துவ ஆராய்ச்சி ஆய்வுகள்”) மற்றும் கல்வி நிறுவனங்கள் (“கல்வியியல் ஆய்வுகள்”) (கூட்டாக “ஆய்வுகள்”) ஆகியவற்றின் சார்பாக நாங்கள் மேற்கொள்ளும் ஆராய்ச்சி, சோதனைமுயற்சிகள், ஆய்வுகள், நோயாளியை ஈடுபடுத்தும் முயற்சிகள் அல்லது திட்டங்களின் தொடர்பாக நாங்கள் சில நேரங்களில் உங்களிடமிருந்து தகவல்களைச் சேகரிக்கிறோம்.

“நாங்கள்”, “எங்கள்” மற்றும் “எங்களின்” எனக் குறிப்பிடுவது Datacubed Health-ஐக் குறிக்கிறது. “மூன்றாம் தரப்பு” என்பவர், நீங்களோ அல்லது நாங்களோ அல்லாத ஒருவரைக் குறிக்கும்.

பயனராகிய பங்கேற்பாளர்கள், எங்களுக்கு வழங்கும் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் செயலாக்குபவராக இருக்கிறோம். Datacubed Health பங்கேற்பாளர்கள் எங்களுக்கு வழங்கும் தனிப்பட்ட தகவலின் கட்டுப்பாட்டாளர் நாங்களேயாகும்.

## நீங்கள் யார்

கொள்கையில், “நீங்கள்” என்பது உங்களை பின்வருமாறு குறிக்கிறது:

- பயனர் – Datacubed Health ஐப் பயன்படுத்தும் ஒரு வணிகத்தின் ஊழியர் அல்லது பிரதிநிதி
- பயனராகிய பங்கேற்பாளர் - வணிக நிறுவனத்தால் அணுகப்பட்டு, வணிகத்தின் சார்பாக Datacubed Health நடத்தும் ஆய்வில் பங்கேற்கும் ஒரு தனிநபர்
- Datacubed Health பங்கேற்பாளர் - Datacubed Health, தனது சார்பாக நடத்தும் ஆய்வில் பங்கேற்கும் ஒரு தனிநபர்

ஒரு பயனராக, நீங்கள் எங்களுக்கு வழங்கும் பயனர் பங்கேற்பாளர்களின் தனிப்பட்ட தகவல்களின் கட்டுப்பாட்டாளர் நீங்களேயாகும்.

## தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்குவதற்கு எங்களிடம் எந்த சட்டப்பூர்வ அடிப்படை உள்ளது

பின்வருவனவற்றின் அடிப்படையில் உங்களின் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் செயலாக்குகிறோம்:

- நாங்கள் நடத்தும் ஆய்வுகள் தொடர்பாக எங்களுக்கு அல்லது எங்களின் பயனருக்கு நீங்கள் வழங்கும் ஒப்புதல். எந்த நேரத்திலும் உங்களின் ஒப்புதலைத் திரும்பப் பெறுவதற்கான உரிமை

உங்களுக்கு உண்டு. legal@datacubed.com என்ற மின்னஞ்சல் முகவரியில் எங்களைத் தொடர்புகொள்வதன் மூலமோ அல்லது ஆய்வு நடத்தப்படும் மருத்துவ தலத்தின் மூலமாகவோ ஆய்வுக்கு நிதியாதாரம் அளிப்பவராகிய எங்களின் பயனரைத் தொடர்புகொள்வதன் மூலமோ உங்களது தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்குவதற்கான உங்களின் ஒப்புதலை நீங்கள் திரும்பப் பெறலாம். 'ஒப்புதல்' என்ற சட்டப்பூர்வ அடிப்படையில் ஆய்வுகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் செயலாக்கத்தில் பின்வருவன அடங்கும்:
    - பயனராகிய பங்கேற்பாளர்கள் மற்றும் Datacubed Health பங்கேற்பாளர்களிடமிருந்து தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்தல், மற்றும்
    - சேவைகளை வழங்குவதற்காகத் தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்தல் மற்றும் பயன்படுத்துதல்.
- பொருந்தக்கூடிய சட்டத்தின் கீழ் உங்கள் உரிமைகளுக்கு உட்பட்டு, எங்கள் நடவடிக்கைகள், சட்டபூர்வமான வணிக நலன்களை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். "சட்டபூர்வமான வணிக நலன்கள்" அடிப்படையில் மேற்கொள்ளப்படும் செயலாக்கம் பின்வருவனவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது:
    - சேவை மற்றும் தொழில்நுட்ப ஆதரவுப் பிரச்சனைகள் மற்றும் கோரிக்கைகளுக்குப் பதிலளித்தல்,
    - எங்களது வலைத்தளத்திற்கு, மற்றும் உதவி மையத்திற்கு, அல்லது legal@datacubed.com-க்கு அனுப்பிய உங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுதல்
    - சேவைகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்

## நாங்கள் சேகரிக்கும் தனிப்பட்ட தகவல்கள் என்னென்ன

நீங்கள் ஒரு கல்வியியல் ஆய்வில் ஒரு பயனர் என்ற வகையில் ஒரு பங்கேற்பாளராகவோ அல்லது Datacubed Health பங்கேற்பாளராகவோ இருந்தால், நீங்கள் கல்வியியல் ஆய்வில் பதிவுசெய்து, பங்கேற்கும்போது பின்வரும் தகவல்களை நாங்கள் சேகரிக்கலாம்:

- பெயர்
- முகவரி
- பிறந்த தேதி
- பிறந்த இடம்
- மின்னஞ்சல் முகவரி
- பயனர் பெயர்

- சேவைகளில் பயன்படுத்தப்படும் உங்கள் செயல்பாடுகள் மற்றும் சாதனங்களிலிருந்து தகவல்கள்
- பொருந்தக்கூடிய வகையில், ஜியோஃபென்சிங் அம்சங்களுடன் பயன்படுத்துவதற்கான இடம்
- தொலைபேசி சாதனத் தகவல்
- புளூடூத் சாதனத் தகவல்
- தொலைபேசி தொடர்புகள்
- செல் மெட்டாடேட்டா
- SMS செய்தி மெட்டாடேட்டா
- IP முகவரிகள்
- சமூக ஊடக மெட்டாடேட்டா
- மக்கள்தொகை தகவல் (இனம், பாலினம், உயரம் மற்றும் எடை)
- மருத்துவ நிலை
- மருந்தளவு மற்றும்/அல்லது மருந்தளவு மாற்ற விவரங்கள்
- ஊசி உட்செலுத்தப்படும் இடம் மற்றும் ஊசி போடப்பட்ட தேதி பற்றிய விவரங்கள்
- ஆரோக்கியம், பொருளாதாரம் மற்றும் விளைவுகள் மீதான ஆராய்ச்சித் (HEOR) தரவுகளுக்கான கருத்தாய்வுத் தகவல்கள்

நீங்கள் ஒரு மருத்துவ ஆராய்ச்சி ஆய்வில் ஒரு பயனராக இருக்கும் பங்கேற்பாளராகவோ அல்லது Datacubed Health பங்கேற்பாளராகவோ இருந்தால், நீங்கள் ஆய்வில் பதிவுசெய்து பங்கேற்கும்போது பின்வரும் தகவல்களை நாங்கள் சேகரிக்கலாம்:

- முதல் பெயர் மற்றும் விருப்பத்தின் பேரில் கடைசி பெயர்
- மின்னஞ்சல் முகவரி
- சேவைகளில் பயன்படுத்தப்படும் உங்கள் செயல்பாடுகள் மற்றும் சாதனங்களிலிருந்து தகவல்கள்
- பொருந்தக்கூடிய வகையில், ஜியோஃபென்சிங் அம்சங்களுடன் பயன்படுத்துவதற்கான இடம்
- IP முகவரிகள்
- மருத்துவ நிலை
- மருந்தளவு மற்றும்/அல்லது மருந்தளவு மாற்ற விவரங்கள்
- ஊசி உட்செலுத்தப்படும் இடம் மற்றும் ஊசி போடப்பட்ட தேதி பற்றிய விவரங்கள்
- ஆரோக்கியம், பொருளாதாரம் மற்றும் விளைவுகள் மீதான ஆராய்ச்சித் (HEOR) தரவுகளுக்கான கருத்தாய்வு தகவல்கள்

ஒரு பயனராக, நாங்கள் பின்வரும் தகவல்களைச் சேகரிக்கலாம்:

- பெயர்
- வணிக முகவரி
- வணிக தொலைபேசி எண்
- வணிக மின்னஞ்சல் முகவரி
- நீங்கள் எங்களுக்கு அனுப்பும் எந்தச் செய்திகளும்
- பில்லிங் தகவல்
- எங்களின் சேவைகளை உங்களுக்கு வழங்குவதற்குத் தேவையான மற்ற விவரங்கள்

ஒரு பயனராக, இந்தத் தகவலின் கட்டுப்பாட்டாளர் நீங்களெயாகும், நாங்கள் இந்தத் தகவலின் செயலாக்குபவராகத்தான் இருப்போம்.

## தனிப்பட்ட தகவல்களை நாங்கள் எவ்வாறு பயன்படுத்தக் கூடும்

எங்கள் சேவைகளை உங்களுக்கு வழங்குவதற்காக, ஒரு பயனராக இருக்கும் பங்கேற்பாளர் அல்லது Datacubed Health பங்கேற்பாளராக உங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களை நாங்கள் பயன்படுத்துகிறோம். எங்கள் சேவைகளை மேம்படுத்தவும், உங்கள் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கவும், சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட பிற நோக்கங்களுக்காகவும் இந்தத் தகவல்களை நாங்கள் பயன்படுத்தலாம்.

நீங்கள் பயனராக இருக்கும் ஒரு பங்கேற்பாளராக இருந்தால், பயனருடனான எங்கள் ஒப்பந்தத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டபடி மட்டுமே உங்கள் தகவல்களை நாங்கள் செயலாக்குவோம். ஆய்வை வழங்கும் நிறுவனமான பயனருடன் நாங்கள் புனைப்பெயரிடப்பட்ட தரவுகளை மட்டுமே பகிர்ந்து கொள்கிறோம்.

உங்கள் விசாரணைகளுக்குப் பதிலளிக்கவும், சேவைகளை உங்களுக்கு வழங்கவும் பயனர்களிடமிருந்து நாங்கள் சேகரிக்கும் தகவல்களைப் பயன்படுத்துகிறோம்.

## தனிப்பட்ட தகவல்களை நாங்கள் எவ்வாறு பகிர்ந்து கொள்ளக் கூடும்

எங்கள் சேவை வழங்குநர்கள் எங்களுக்கு ஆதரவளிப்பதற்காகவும், உங்களுக்கு உதவுவதற்காகவும், எங்கள் சேவைகளை வழங்க உதவுவதற்காகவும் நாங்கள் தனிப்பட்ட தகவல்களை ரகசியமாக எங்கள் சேவை வழங்குநர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்:

- Amazon Web Services, Inc. (AWS) நிறுவனமானது, அமெரிக்கா மற்றும் ஜெர்மனியில் பெருங்கணினி சேவையகங்களை வழங்குகிறது, அவை உங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட அனைத்துத் தனிப்பட்ட தகவல்களையும் சேமிக்கின்றன
- அமெரிக்காவில் அமைந்துள்ள The Rocket Science Group LLC d/b/a Mailchimp, நிருவனமானது, மின்னஞ்சல் தகவல்தொடர்புகளை நிர்வகிக்க எங்களுக்கு உதவுகிறது
- அமெரிக்கா, பெல்ஜியம், ருமேனியா, சீனா, போலந்து மற்றும் பிலிப்பைன்ஸில் அமைந்துள்ள Stefanini Group நிறுவனமானது, ஆதரவளிக்க வேண்டிய கோரிக்கைகளை நிர்வகிக்க எங்களுக்கு உதவுகிறது
- ஜெர்மனி மற்றும் அமெரிக்காவில் அமைந்துள்ள Twilio, Inc., நிறுவனம், எங்களுக்குக் குறுஞ்செய்திகளை அனுப்பவும் பெறவும் உதவுகிறது மற்றும் வீடியோ கான்பரன்சிங் சேவையை வழங்குகிறது
- ஜெர்மனி மற்றும் அமெரிக்காவில் அமைந்துள்ள Splunk, Inc., மற்றும் ஜெர்மனி மற்றும் அமெரிக்காவில் அமைந்துள்ள Sisense, Ltd., ஆகியவை தனிப்பட்ட தகவல்களைப் பற்றிய செயல்திறன் அறிக்கைகளைப் பகுப்பாய்வு செய்து வழங்க எங்களுக்கு உதவுகின்றன

எங்கள் வாடிக்கையாளர்களின் வழிகாட்டுதலின் பேரில், மற்றும் அவர்களின் சார்பாகச் சேவைகளை வழங்கும் மருத்துவமனைகள் மற்றும் கிளினிக்குகளுடன் தனிப்பட்ட தகவல்களைப் பகிர்ந்து கொள்கிறோம்.

நீதிமன்ற அழைப்பாணை அல்லது நீதிமன்ற உத்தரவுக்குப் பதிலளிக்கும் விதமாக, சட்டப்பூர்வ உரிமைகோரலைப் பாதுகாக்க அல்லது எங்களின் சட்ட உரிமைகளை நிலைநாட்ட அல்லது பாதுகாக்க அல்லது பொருந்தக்கூடிய சட்டத்தால் அனுமதிக்கப்படுவது போன்ற சட்டத்திற்கு இணங்குவது அவசியம் என்று நாங்கள் நம்பும் அளவிற்கு, தனிப்பட்ட தகவல்களை அரசு மற்றும்/அல்லது சட்ட அமலாக்க நிறுவனங்களுடன் நாங்கள் பகிர்ந்து கொள்ளக் கூடும். தரவுகளை வெளியிடக் கோரும் எந்தவொரு நீதிமன்ற அழைப்பாணை அல்லது நீதிமன்ற உத்தரவின் சட்டப்பூர்வத்தன்மையை கருத்தில் கொள்ள நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். கவனமாக மதிப்பாய்வு செய்த பிறகு, செல்லுபடியாகும் காரணங்களைக் கண்டறிந்தால் அல்லது நீதிமன்ற அழைப்பாணை எதிர்த்து, இறுதி நீதிமன்ற முடிவு எடுக்கப்படும் வரை அதன் அமலாக்கத்தைத் தாமதப்படுத்த இடைக்கால நடவடிக்கைகளை நாடுவோம். பொருந்தக்கூடிய நடைமுறை விதிகளால்

தேவைப்படாவிட்டால் அன்றி, தனிப்பட்ட தரவை நாங்கள் வெளியிட மாட்டோம், மேலும் சம்மன் அல்லது நீதிமன்ற உத்தரவின் நியாயமான விளக்கத்தின் அடிப்படையில் தேவையான குறைந்தபட்சத் தகவல்களை மட்டுமே பகிர்ந்து கொள்வோம். பகிரப்படும் தகவல்கள் நீதிமன்ற அழைப்பாணை அல்லது நீதிமன்ற உத்தரவால் கோரப்படுவதைப் பொறுத்தது.

குற்றச் செயல்கள், தனிப்பட்ட காயம், சொத்துக்களுக்கான சேதம் அல்லது உடல் ரீதியான தீங்கு ஆகியவற்றைத் தடுப்பது அவசியம் அல்லது பொருத்தமானது என்று நாங்கள் நம்பினால், தனிப்பட்ட தகவல்களை நாங்கள் வெளியிடக் கூடும். வெளிப்படுத்தப்படும் தனிப்பட்ட தகவல்களின் அளவு சூழ்நிலையைப் பொறுத்து மாறுபடும்.

கையகப்படுத்தல், விற்பனை செய்தல், சொத்துப் பரிமாற்றம், இணைப்பு அல்லது திவால்நிலை ஏற்பட்டால், உங்கள் தகவலை நாட்டம் கொண்ட ஒரு வாரிசுதாரருக்கு நாங்கள் மாற்றலாம், இதில் மூன்றாம் தரப்பினர் மட்டுமல்லாமல், அவர்கள் அல்லாதோரும் அடங்குவர். பரிமாற்றத்திற்குப் பிறகு, சட்டத்தால் தடைசெய்யப்பட்டாலன்றி, உங்கள் தகவலுக்குப் பொருந்தக்கூடிய கொள்கைகளைப் பரிமாற்றத்தில் பெறுபவரால் தீர்மானிக்கப்படலாம். இடம் மாற்றப்படும் தனிப்பட்ட தகவல்கள் மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி சேகரிக்கப்பட்ட தனிப்பட்ட தகவல்களைக் கொண்டபடி இருக்கும்.

உங்கள் தகவல்களை நாங்கள் பகிரும் எந்த மூன்றாம் தரப்பினரும், இந்தக் கொள்கையில் விளக்கப்பட்டுள்ள மற்றும் Apple செயலி வழிகாட்டுதல்களால் தேவைப்படும் அதே அளவு பாதுகாப்பை வழங்குவார்கள்.

## நாங்கள் தனிப்பட்ட தரவுகளை எங்கே சேமித்து செயலாக்குகிறோம்

உங்களிடமிருந்து நாங்கள் சேகரிக்கும் தகவலை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU) AWS இனால் வழங்கப்படும் சேவையகங்களில் சேமித்து வைக்கிறோம்.
பரிசோதிக்கும்நோக்கங்களுக்காக, நாங்கள் உங்களிடமிருந்து சேகரிக்கும் தகவல்கள், அமெரிக்காவில் உள்ள எங்கள்ஊழியர்கள் பயன்படுத்தும் டெஸ்க்டாப் மற்றும்மடிக்கணினிகளிலும் சேமிக்கப்படலாம். எங்களுடைய செயல்பாடுகள் மற்றும் எங்களுடைய சில சர்வர்கள் அமெரிக்காவில் அமைந்திருப்பதால், ஐரோப்பிய பொருளாதாரப் பகுதி (EEA), யுனைடெட் கிங்டம் (UK) மற்றும்

சுவிட்சர்லாந்தில் நாங்கள் உங்களிடமிருந்து சேகரிக்கும் தகவல்கள் EEA, UK மற்றும் சுவிட்சர்லாந்திலிருந்து அனுப்பப்பட்டு, வெளிநாடுகளில் சேமித்து வைக்கப்படலாம். உங்களுடைய தகவல்களை EEA, UK மற்றும் சுவிட்சர்லாந்திற்கு வெளியே அனுப்புவதற்காக நாங்கள் நிலையான ஒப்பந்தங்களைச் செய்து கொள்கிறோம். ஐரோப்பிய ஒன்றியம் (EU) - அமெரிக்கத் தனியுரிமைப் பாதுகாப்புக் கவசக் கட்டமைப்பு மற்றும் சுவிஸ்-அமெரிக்கத் தனியுரிமைப் பாதுகாப்புக் கவசக் கட்டமைப்பு ஆகியவற்றிலிருந்து நாங்கள் விலகியுள்ளோம். இந்தக் கட்டமைப்புகள் அமெரிக்க வணிகத் துறையால் ஐரோப்பிய பொருளாதாரப் பகுதி (EEA) மற்றும் சுவிட்சர்லாந்திலிருந்து அமெரிக்காவுக்கு மாற்றப்படும் தனிப்பட்ட தகவல்களின் சேகரிப்பு, பயன்பாடு மற்றும் தக்கவைப்பு தொடர்பாக நிறுவப்பட்டவை. எவ்வாறாயினும், இந்தக் கட்டமைப்புகளின் கீழ் நாங்கள் பெற்ற தனிப்பட்ட தகவல்களுக்குத் தனியுரிமைப் பாதுகாப்புக் கவசக் கொள்கைகளைத் தொடர்ந்து பயன்படுத்துவோம். தனியுரிமைப் பாதுகாப்புக் கவசத் திட்டத்தைப் பற்றி மேலும் அறிய, https:// www.privacyshield.gov/-ஐப் பார்வையிடவும்.

## உங்கள் தனிப்பட்ட தரவுகளை\வை நாங்கள் எவ்வளவு காலம் வைத்திருக்கக் கூடும்

சட்டப்படி தேவைப்படும் கால அளவு வரை உங்களின் தகவல்களை நாங்கள் தக்க வைத்துக் கொள்ளக் கூடும். எந்தவொரு முரண்பட்ட சட்டத் தேவையும் இல்லாவிட்டால், எங்கள் சேவைகளைச் செயல்படுத்த தேவையான காலத்திற்கு மட்டுமே உங்கள் தகவல்களை நாங்கள் வைத்திருப்போம். உங்களின் தகவல்களை ஒரு நியாயமான காலத்திற்கு நாங்கள் வைத்திருக்கக் கூடும். எடுத்துக்காட்டாக, அமெரிக்கச் சட்டம் பொருந்தும் வகையில், மற்றும் அதைக் கோரும் வகையில், பாதுகாக்கப்பட்ட உடல்நலத் தகவல்களை 7.5 ஆண்டுகளுக்கு அல்லது சட்டத்தால் குறிப்பிடப்பட்டுள்ளபடி நாங்கள் தக்கவைத்துக்கொள்கிறோம். கூடுதலாக, மருத்துவ ஆய்வு அறிக்கைகளின் தொழில்துறை கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான ஒத்திசைவு வழிகாட்டுதல்கள் குறித்த சர்வதேச மாநாட்டின் இன்டர்நேஷனல் கான்பரன்ஸ் ஆன் ஹார்மனைஸேஷன் - ICH) வழிகாட்டுதல்கள் பொருந்தும் சந்தர்ப்பங்களில், மருத்துவ ஆராய்ச்சி ஆய்வுத் தரவுகளானவை, சேவைகள் முடிந்த பிறகும் 25 ஆண்டுகளுக்கும் அல்லது உள்ளூர் சட்டங்கள் தேவைப்பட்டால் அதற்கும் மேலாகவும் தக்கவைக்கப்படும்.

.

## சமூக ஊடகங்கள் மற்றும் குக்கீகளில் எங்களை எங்கே காணலாம்

நீங்கள் எங்களை Facebook, Twitter மற்றும் LinkedIn-இல் காணலாம். எங்களின் சமூக ஊடகப் பக்கங்களை நீங்கள் பார்வையிடும்போது, நீங்கள் கோரிய சேவைகளை வழங்குவதற்கு அவசியமில்லாத குக்கீகளின் அமைப்புகளை நீங்கள் கட்டுப்படுத்தலாம். குக்கீ என்பது உங்கள் சாதனத்தில் சேமிக்கப்படும் ஒரு சிறிய கோப்பு ஆகும், இது www.datacubed.com இணையதளத்தின் அம்சங்களையும் செயல்பாட்டையும் ஏதுவாக்குகிறது. Datacubed Health-இன் குக்கீ கொள்கை, குக்கீகள் என்றால் என்ன, குக்கீகளின் எங்கள் பயன்பாடு மற்றும் நீங்கள் எப்படிக் குக்கீகளை நிர்வகிக்கலாம் என்பதை விளக்குகிறது. நீங்கள் கோரிய சேவைக்கு அவசியமான குக்கீகளைத் தவிர, எந்தக் குக்கீயும் உங்கள் சாதனத்தில் இருக்காது, மேலும் குக்கீகளிலிருந்து சேகரிக்கப்பட்ட எந்தத் தகவலையும் சட்டத்தால் அனுமதிக்கப்பட்டதை விட நீண்ட காலம் நாங்கள் வைத்திருக்க மாட்டோம்.

## உங்கள் தகவல் தொடர்பான உங்களின் உரிமைகள்

உங்களுக்குப் பின்வரும் உரிமைகள் உள்ளன:

- உங்கள் தகவலை நாங்கள் சேகரிக்கிறோமா, பயன்படுத்துகிறோமா அல்லது பகிர்கிறோமா என்பதை அறிந்துகொள்ள, இந்தத் தகவலுக்கான அணுகலைக் கோருவதற்கு
- உங்கள் தகவல் தவறானதாகவோ அல்லது முழுமையடையாததாகவோ இருந்தால், அதை எங்களைத் திருத்துமாறுக் கோருவதற்கு
- பின்வரும் காரணங்களுக்காக உங்களின் தகவலை நீக்கும் படி எங்களிடம் கேட்பதற்கு
    - உங்கள் தகவல் சேகரிக்கப்பட்ட, பயன்படுத்தப்பட்ட அல்லது பகிரப்பட்ட நோக்கங்களுக்காக இனி அவசியமில்லையெனில்
    - சேகரிப்பு, பயன்பாடு அல்லது பகிர்வு அடிப்படையாகக் கொண்ட ஒப்புதலை நீங்கள் திரும்பப் பெற்றால்
    - சேகரிப்பு, பயன்பாடு அல்லது பகிர்வுக்கு நீங்கள் ஆட்சேபனை தெரிவித்தால், மேலும் சேகரிப்பு, பயன்பாடு அல்லது பகிர்வைத் தொடர்வதற்கு எந்தவொரு சட்டபூர்வமான ஆர்வமும் இல்லை என்றால்
    - நேரடி சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக உங்கள் தகவல்களைச் சேகரிப்பதற்கோ, பயன்படுத்துவதற்கோ அல்லது பகிர்வதற்கோ நீங்கள் எதிர்ப்பு தெரிவித்தால்

    - உங்கள் தகவல் சட்டவிரோதமாக சேகரிக்கப்பட்டாலோ, பயன்படுத்தப்பட்டாலோ அல்லது பகிரப்பட்டாலோ என்றால்
    - சட்டப்பூர்வ கடமைக்கு இணங்க உங்கள் தகவல் அழிக்கப்பட வேண்டும் என்றால்
    - குழந்தைகளுக்கு ஆன்லைன் சேவைகளை வழங்குவதற்காக உங்கள் தகவல்கள் சேகரிக்கப்பட்டிருந்தால்
- பின் வரும் காரணங்களுக்காக உங்களின் தகவல்களைச் சேகரிப்பது, பயன்படுத்துவது அல்லது பகிர்வதை நாங்கள் கட்டுப்படுத்துமாறுக் கேட்கலாம்
    - உங்கள் தகவலின் துல்லியத்தை நீங்கள் எதிர்த்தால்
    - உங்கள் தகவல்களைச் சேகரிப்பது, பயன்படுத்துவது அல்லது பகிர்வதை நீங்கள் சட்டப்பூர்வமான ஆர்வத்தின் அடிப்படையில் எதிர்த்திருந்தால், இதில், எங்கள் அல்லது மூன்றாம் தரப்பினரின் சட்டப்பூர்வமான ஆர்வம் உங்கள் சொந்த நலனை விட புறம் தள்ளுகிறதா என்பதை நாங்கள் மதிப்பிடுகிறோம்
    - சேகரிப்பு, பயன்பாடு அல்லது பகிர்வு சட்டவிரோதமானது, மேலும் நீங்கள் நீக்குவதை எதிர்த்து, அதற்குப் பதிலாகப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துமாறு கோரினால்
    - உங்கள் தகவல் எங்களுக்கு இனி தேவையில்லை எனும்போது, ஆனால் சட்டப்பூர்வ உரிமைகோரலை நிறுவ, செயல்படுத்த அல்லது பாதுகாக்க உங்களுக்குத் தேவைப்பட்டால்
- நீங்கள் எங்களுக்கு வழங்கிய தகவலை எடுத்து வேறு நிறுவனத்திற்கு மாற்ற, அந்தத் தகவலைச் சேகரித்தல், பயன்படுத்துதல் அல்லது பகிர்தல் ஆகியவை உங்கள் ஒப்புதல் அல்லது எங்களுடனான ஒப்பந்தத்தின் அடிப்படையில் செய்யப்படும்போதும் தானியங்கி வழிமுறைகளால் செய்யப்பட இயலுதல்
- உங்கள் தகவல் முறையான ஆர்வத்தின் அடிப்படையில், சட்டப்பூர்வ பணியின் செயல்திறன், நேரடி சந்தைப்படுத்தல் அல்லது அறிவியல், வரலாற்று ஆராய்ச்சி அல்லது புள்ளிவிவர நோக்கங்களுக்காகச் சேகரிக்கப்படுதல், பயன்படுத்துதல் அல்லது பகிர்வுக்கு ஆட்சேபனை தெரிவிக்க
- உங்களைப் பற்றிய சட்ட விளைவுகளை ஏற்படுத்தும் அல்லது இதேபோல் உங்களைக் கணிசமாகப் பாதிக்கும் தானியங்கி செயலாக்கத்தை (சுயவிவரமாக்கல் உட்பட) மட்டுமே அடிப்படையாகக் கொண்ட முடிவுக்கு உட்பட்டதாக இருக்கக்கூடாது
- மேற்பார்வை அதிகாரியிடம் புகார் அளிக்க

## உங்களது உரிமைகளை நீங்கள் எப்படி பயன்படுத்துகிறீர்கள்

legal@datacubed.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் எந்த நேரத்திலும் உங்கள் கணக்குத் தகவலை அணுகலாம், புதுப்பிக்கலாம் அல்லது நீக்கலாம் அல்லது உங்கள் கணக்கை ரத்துச் செய்யலாம். சில சந்தர்ப்பங்களில், உங்களைப் பற்றிய சில தகவல்களை நாங்கள் சட்டப்பூர்வமாகத் தக்கவைத்துக் கொள்ள வேண்டியிருக்கலாம் என்பதை நினைவில் கொள்ளவும்.

## ஆளுமை செய்யும் சட்டம்

ஐரோப்பிய ஒன்றிய (EU) சட்டங்கள் இந்தக் கொள்கையை ஆளுமை செய்கின்றன.

## கொள்கையில் மாற்றங்கள்

இந்தக் கொள்கை தற்போதையது மேலே குறிப்பிடப்பட்ட நடைமுறைக்கு வரும் தேதி முதல் செல்லுபடியாகும். நாங்கள் அவ்வப்போது கொள்கையை மாற்றலாம், எனவே அவ்வப்போது கொள்கையைச் சரிபார்க்கவும். கொள்கையில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் , www.datacubed.com என்ற எங்களின் இணையத்தளத்தில் அவற்றை இடுகையிடுவோம்.